TAKE®
Enabling Business Efficiencies

TECHNOLOGY ANALYTICS KNOWLEDGE ENTERPRISE

December 9, 2022

TAKE/BSE/2022-23
The Manager
Dept. of Corporate Services-Listing
BSE Limited,
P. J. Towers, Dalal Street,
Mumbai - 400001
Scrip Code: 532890

TAKE/NSE/2022-23
The Manager-Listing Department
National Stock Exchange of India Limited
Exchange Plaza,
Bandra - Kurla Complex, Bandra (East),
Mumbai - 400051
Symbol: TAKE

Dear Sir/ Madam,

Sub: Newspaper Publication

Pursuant to Regulations 33 and 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed herewith, the extract of the Consolidated Unaudited Financial Results for the quarter and half year ended September 30, 2022, published in newspapers, namely, Makkal Kural (Tamil) and Financial Express (English), dated December 8, 2022, and December 9, 2022, respectively.

Kindly take the same on record and acknowledge.

Thanking you.

Yours sincerely,
For TAKE Solutions Limited

P. Srinivasan

TAKE SOLUTIONS LIMITED CHENNAI

Srinivasan. P
Company Secretary
Encl: As above.

கோவில்களின் ஆகமங்களைக் கண்டறிய
50 கேள்விகளுடன் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைக்கு இடைக்காலத் தடை: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, டிச. 8–

கோவில்களின் ஆகமங்களை கண்டறிவது தொடர்பாக 50 கேள்விகளுடன் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைக்கு இடைக்கால தடை விதித்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் கோவில்களில் அர்ச்சகர் நியமன விதிகளை எதிர்த்த வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட், ஆகம விதிப்படி அர்ச்சகர்களை நியமிக்க வேண்டும் என்பதால், எந்தெந்த கோவில்கள் எந்தெந்த ஆகமங்களை பின்பற்றுகின்றன என்பதை அடையாளம் காண ஐகோர்ட் ஓய்வு பெற்ற நீதிபதி சொக்கலிங்கம் தலைமையில் ஐந்து பேர் குழுவை நியமித்து உத்தரவிட்டது. இக்குழுவில், குழு தலைவர் ஒப்புதலுடன் இரு உறுப்பினர்களை அரசு நியமிக்கவும் அறிவுறுத்தியிருந்தது.

இந்நிலையில், கோவில்களின் ஆகமங்களை அடையாளம் காண, அறநிலையத் துறை உயர்மட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் சத்தியவேல் முருகன் தயாரித்த 50 கேள்விகளுக்கு விடையளிக்கும்படி, அனைத்து கோவில்களுக்கும் அறநிலையத்துறை ஆணையர் நவம்பர் 4ம் தேதியிட்ட சுற்றறிக்கையை ரத்து செய்யக் கோரி டி.ஆர்.ரமேஷ் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருக்கிறார்.

அவர் தனது மனுவில், கோவில்களின் ஆகமத்தை கண்டறிய ஐகோர்ட் நியமித்த குழுவின் அதிகாரத்தை பறித்துக் கொள்ளும் வகையில், சம்பந்தமில்லாத கேள்விகளுடன் இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும், ஐகோர்ட் உத்தரவின்படி இரு பிரதிநிதிகளை நியமிக்காத அரசு, அறநிலையத் துறை உயர்மட்ட ஆலோசனைக்குழு தலைவருக்கு அதிக அதிகாரம் வழங்கியுள்ளதாகவும், இது நீதிமன்ற அவமதிப்பு செயல் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகமங்கள் பற்றி ஏதும் தெரியாத சத்தியவேல் முருகன், நடைமுறையில் இல்லாத தமிழ் ஆகமம் பற்றி தவறான பரப்புரை மேற்கொண்டு வருவதாகவும், ஆகமங்களை அறியாத அவர் தயாரித்த கேள்விகளுடன் கூடிய சுற்றறிக்கையை ரத்து செய்வதுடன், அவரை ஐகோர்ட் நியமித்த குழுவில் உறுப்பினராக நியமிக்க தடை விதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி ராஜா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்த போது, ஐகோர்ட் உத்தரவின்படி, ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைக்கப்படாத நிலையில், குறிப்பிட்ட நபரை நியமிக்க கூடாது என முன்கூட்டியே இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும், கடந்த நவம்பர் 4ம் தேதி சுற்றறிக்கை வேறு பயன்பாட்டுக்கு அனுப்பப் பட்டதாகவும் தமிழக அரசுத்தரப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், குறிப்பிட்ட அந்த சுற்றறிக்கை ஆகம விவரங்களை கோரும் வகையில் உள்ளதாக கூறி, ஆகமங்களை கண்டறிவது தொடர்பாக 50 கேள்விகள் எழுப்பி அனுப்பப்பட்ட சுற்றறிக்கைக்கு தடை விதித்து உத்தரவிட்டனர்.

மேலும், மனுவுக்கு நான்கு வாரங்களில் பதிலளிக்கும்படி தமிழக அரசுக்கும், இந்து சமய அறநிலையத் துறைக்கும் உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை தள்ளிவைத்தனர்.

பிரபல ஓவியர் – எழுத்தாளர் மனோகர் தேவதாஸ் மரணம்: முதல்வர் ஸ்டாலின் இரங்கல்

சென்னை, டிச.8–

பிரபல ஓவியர் 'பத்மஸ்ரீ' மனோகர் தேவதாஸ் மறைவுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

பிரபல ஓவியரும் எழுத்தாளருமான 'பத்மஸ்ரீ' மனோகர் தேவதாஸ் (86) விழித்திரை நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று (7–ந் தேதி) இயற்கை எய்தினார் என்று அறிந்து மிகவும் துயருற்றேன்.

மரபுக் கட்டடங்களை ஓவியமாக வரைவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர் மனோகர் தேவதாஸ். தமது முப்பது வயதிலேயே ரெட்டினிஸ் பிக்மென்டோசா நோயால் பாதிக்கப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வைத் திறனை இழந்து வந்தாலும் ஊக்கம் சற்றும் குறையாமல் தமது கலைப்பணியையும் எழுத்துப் பணியையும் அவர் மேற்கொண்டார் என்பது போற்றத்தக்கது. கோயில் பகுதிகள், வீதிகள், புகழ்வாய்ந்த கட்டடங்கள், வைகை ஆறு, இயற்கை எழில் கொஞ்சும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் என மதுரை மண்ணின் அடையாளங்களை மிக அழகாகத் தீட்டியதால் மனோகர் தேவதாசும் மதுரையின் ஓர் அடையாளமாகவே மாறிப்போனார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம், அப்போதைய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தைச் சந்தித்தபோது கூட, மனோகர் தேவதாசின் 'மதுரையின் பல அம்சங்கள்' (Multiple Facets of Madurai) என்ற நூலைத்தான் நான் அன்பளிப்பாக வழங்கியிருந்தேன்.

தனது காதல் மனைவி மஹிமா பெயரில் தொண்டு நிறுவனம் தொடங்கி, கிராமப்புற மக்களின் கண் சிகிச்சைக்கு உதவியதன் வழியே கலைஞராக மட்டுமின்றி உயர்ந்த மனிதராகவும் மனோகர் தேவதாஸ் தன் வாழ்வை அமைத்துக்கொண்டார். உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த தனது துணைவியாரை அவரது இறுதிக்காலம் வரை அன்புடன் கவனித்துக்கொண்ட மிகச் சிறந்த காதலனாக கணவனாக, மதுரையின் வாழ்வில் இருந்து பிரிக்க முடியாத மண்ணின் மைந்தனாக, பார்வைக்குறைபாட்டைப் பொருட்படுத்தாமல் சாதித்த ஒப்பற்ற ஓவியக் கலைஞனாக, பல நூல்களைப் படைத்த எழுத்தாளராக, அறப்பணிகளை மேற்கொண்ட மனித நேயராக எனப் பல வகைகளிலும் ஓர் எடுத்துக்காட்டாகப் பெருவாழ்வு வாழ்ந்து மறைந்துள்ளார் மனோகர் தேவதாஸ்.

அன்னாரின் மறைவால் துயரில் ஆழ்ந்துள்ள கலைத்துறை நண்பர்கள், உறவினர்கள், மதுரை மக்கள் ஆகிய அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

புயல் எதிரொலி: புதுச்சேரியில் 144 தடை உத்தரவு

புதுச்சேரி, டிச. 8–

புயல் எதிரொலியாக புதுச்சேரியில் பேனர்கள், பிளக்ஸ்கள், கட் அவுட், விளம்பர பலகைகள் வைக்க மாவட்ட நிர்வாகம் 144 தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாண்டஸ் புயல் புதுச்சேரி – ஸ்ரீஹரிகோட்டா அருகே நாளை இரவு கரையை கடக்கும் என வானிலை மையம் எச்சரித்துள்ளது. இதனால் புதுச்சேரியில் உள்ள அனைத்து அரசு துறைகளும் உஷார்படுத்தப்பட்டுள்ளன. புதுச்சேரிக்கு வந்துள்ள பேரிடர் மீட்பு குழுவினர் தாழ்வான பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

புதுச்சேரியில் கனமழையுடன் 50 முதல் 70 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதால், பேனர்கள், பிளக்ஸ்கள், கட் அவுட், விளம்பர பலகைகள் வைக்க கலெக்டர் வல்லவன் குற்றவியல் நடைமுறை சட்டம் 144 பிரிவின் கீழ் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதனை தொடர்ந்து நள்ளிரவே பேனர்களை அகற்றும் பணியில் போலீசாரும், உள்ளாட்சி துறையினரும் களமிறங்கினர்.

தொல்லியல் துறை கிணற்றில் 2 மாணவர்கள் உடல் மீட்பு

கும்மிடிப்பூண்டி, டிச. 8–

கும்மிடிப்பூண்டி அடுத்த பூவலம்பேட்டில் தொல்லியல் துறையினர் வெட்டி வைத்த கிணற்றில் இரண்டு மாணவர்கள் பிணமாக மீட்கப்பட்டனர்.

கும்மிடிப்பூண்டி அடுத்த பூலாம்பேடு ஊராட்சி திடீர் நகரில் தொல்லியல் துறைக்காக ஒதுக்கப்பட்ட 94 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு வரும் நிலையில் அந்த இடத்தில் உள்ள தரை கிணற்றில் சிறுவன் ஒருவன் சடலமாக கிடப்பதாக கவரப்பேட்டை போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற கவரப்பேட்டை போலீசார் உடலை மீட்ட நிலையில் தேர்வாய் தீயணைப்பு வீரர்களின் உதவியுடன் மற்றொரு மாணவனையும் தேடி வந்த கவரப்பேட்டை போலீசார் சுமார் ஒரு மணி நேர தேடுதலுக்கு பின்னர் தரை கிணற்றில் இருந்த மற்றொரு மாணவரையும் மீட்டெடுத்தனர். அரசுப் பள்ளியில் படித்து வந்த அந்த 2 மாணவர்களின் உடல்களும் பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப் பட்டது.

அதனையடுத்து நடைபெற்ற போலீசாரின் விசாரணையில் நேற்று காலை முதல் குருவராஜா கண்டிகை அரசு மேல்நிலைப் பள்ளியில் 8 ஆம் வகுப்பு படிக்கும் 13 வயதுடைய கோபி சந்த் என்ற மாணவனும், புது ராஜா கண்டிகை அரசு தொடக்க பள்ளியில் 5 வகுப்பு படிக்கும் 12 வயதுடைய நகுல் என்ற மாணவனும் காணாமல் போனதாகவும் இரவு முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இது குறித்து கவரப்பேட்டை போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

டெல்லியில் சூட்கேசுக்குள் அழுகிய நிலையில் பெண்ணின் உடல்

புதுடெல்லி, டிச.8–

மேற்கு டெல்லியின் பஞ்சாபி பாக் பகுதியில் நேற்று மாலை சூட்கேசில் அடையாளம் தெரியாத பெண்ணின் உடல் சிதைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக டெல்லி போலீசார் தெரிவித்துள்ளனர்.

காவல் துறையினரின் கூற்றுப்படி, ஒரு சூட்கேசில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அவர்களின் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் வந்தது. தகவலின் அடிப்படையில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

வாய்க்காலில் இருந்த சூட்கேசை வெளியே எடுத்து திறந்தபோது உள்ளே ஒரு பெண்ணின் உடல் மிகவும் அழுகிய நிலையில் காணப்பட்டது. உடல் மிகவும் அழுகிய நிலையில் காணப்பட்ட பெண் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

அந்தப் பெண்ணின் வயது சுமார் 2830 வயது இருக்கலாம் என போலீசார் தெரிவித்தனர். இறந்த பெண் யார் என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திருவொற்றியூர் உள்ளிட்ட 15 பகுதி அலுவலகங்களில் 10–ந் தேதி குடிநீர் வாரியம் குறை தீர்க்கும் கூட்டம்

சென்னை, டிச.8–

சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் 10–ந் தேதி சனிக்கிழமை அன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இதுகுறித்து சென்னைக் குடிநீர் வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் 10–ந் தேதி காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம் வருமாறு:–

திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு. வி.க.நகர், அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி, சோழிங்கநல்லூர் ஆகிய 15 பகுதி அலுவலகங்களில் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நேற்று 11 பேருக்கு கொரோனா

சென்னை, டிச.8

தமிழகத்தில் நேற்று 6 ஆண்கள், 5 பெண்கள் உள்பட மொத்தம் 11 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. சென்னையில் 4 பேர் உள்பட மொத்தம் 7 மாவட்டங்களில் தொற்று பாதிப்பு பதிவாகியுள்ளது. அரியலூர், செங்கல்பட்டு, நாமக்கல் உள்ளிட்ட 31 மாவட்டங்களில் பாதிப்பு இல்லை. தமிழகத்தில் கொரோனா தொற்றால் நேற்று எந்த மாவட்டத்திலும் உயிரிழப்பு ஏற்படவில்லை.

மாவட்ட வாரியாக சென்று திட்டப்பணிகள் ஆய்வு...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தினர் மாளிகை செல்லும் வழியில் முதலமைச்சர், திரண்டிருந்த பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு, அவர்களது உற்சாக வரவேற்பை ஏற்றுக்கொண்டார்.

ஸ்டாலின் பேச்சு

தென்காசியில் இன்று நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் முதலமைச்சர் ஸ்டாலின் பேசியதாவது:–

கழக ஆட்சி மலர்ந்து பத்தொன்பது மாதங்கள் ஆகி இருக்கிறது. இந்த 19 மாத காலங்களில் பல நூறு சாதனைகளை தமிழ்நாட்டு மக்களுக்கு நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம் என்பதை சாதாரணமாக இல்லை, நெஞ்சை நிமிர்த்தி நான் உங்கள் முன்னால் தெரிவிக்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னதாக, தென்காசி மாவட்ட மக்களின் கோரிக்கைகள் சில என்னிடம் தெரிவிக்கப்பட்டன. உடனடியாக அதிகாரிகளை அழைத்து நான் பேசினேன். கலந்துரையாடினேன். அவைகள் சிலவற்றை நிறைவேற்றித் தருவதற்கான அறிவிப்பை இந்த மேடையிலேயே அறிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தென்காசி மாவட்டத்தின் முக்கிய இணைப்புச் சாலையாக விளங்கக்கூடிய புளியங்குடி சங்கரன்கோயில் நெடுஞ்சாலை மேம்படுத்தப்படும்.

மாவட்ட விளையாட்டு வளாகம்

புதிதாக அமைந்துள்ள தென்காசி மாவட்டத்திற்கு புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்படும்.

துரைசாமிபுரம் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, பனையூர் கூடலூர் துரைசிங்கபுரம் சாலை மேம்படுத்தப்படும்.

தென்காசி குற்றாலம் இடையே இருக்கக்கூடிய இலஞ்சி பெரிய ஏரி ஒரு முக்கிய மீன்பிடி மற்றும் சுற்றுலாத்தலமாக 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

சிவகிரி மற்றும் ஆலங்குளம் பகுதி விவசாயிகளினுடைய கோரிக்கையை ஏற்று அவர்கள் பயன்பெறக்கூடிய வகையில் ஆலங்குளத்தில் புதிய வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும்.

அதேபோல, இங்கே சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டவாறு, ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள இராமநதி, ஜம்புநதி, திட்டப்பணிகளுக்கு கடந்த ஆட்சி காலத்தில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு முறையான அனுமதி பெறப்படாததால், திட்டப்பணிகள் துவக்கப்படாமலேயே இருந்தது. ஆனால் நமது ஆட்சி அமைந்த பிறகு இதற்கான முறையான வனத்துறை அனுமதிகள் பெறப்பட்டு, தற்போது இத்திட்டம் ஒன்றிய வனத்துறைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சாதனை அரசு

இத்தகைய நலத்திட்ட சாதனைகளின் அரசுதான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு.

வினைதீர்த்த நாடார்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளியில், 3ஆம் வகுப்பு படிக்கக்கூடிய ஆராதனா எனும் குழந்தை, சமீபத்தில், எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அந்தக் கடிதத்தில், தான் படிக்கும் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டித்தர வேண்டும் என்று கேட்டிருந்தார். பாருங்கள் ஒரு குழந்தை எழுதியிருக்கிறது. அந்தக் கடிதத்தை படித்ததும் எனக்குப் பெருமையாக இருந்தது. எத்தகைய நம்பிக்கையை அவர் என் மீது வைத்திருந்தால் இந்தக் கடிதம் எழுதி இருப்பார் என நான் நினைத்து மகிழ்ச்சி அடைந்தேன். குழந்தை ஆராதனாவின் கோரிக்கை ஏற்கப்பட்டது.

அதற்கு முதற்கட்டமாக, 35 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இரண்டு வகுப்பறைகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாவட்ட மக்களினுடைய நீண்டநாள் கோரிக்கை, தென்காசி மாவட்டம் சங்கரன்கோயில் வட்டம் மேலநீலிதநல்லூர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்டு தனி அலுவலரை நியமித்த அரசு தான் தமிழக அரசு, தி.மு.க அரசு.

எடப்பாடி புலம்பல்

ஒவ்வொருவருடைய தேவைகளையும் கேட்டுக் கேட்டு ஒவ்வொரு பகுதியின் பிரச்சினையையும் அறிந்து, அறிந்து நிறைவேற்றித் தரும் அரசாக நம்முடைய அரசு செயல்பட்டு வருகிறது. இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சித் தலைவர், "திமுக ஆட்சிக்கு வந்ததும் எந்த சாதனையையும் செய்யவில்லை எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். சில மாதங்கள் வரைக்கும் என்ன சொன்னார் என்றால், விடுபட்ட சில வாக்குறுதிகளை மட்டும் எடுத்து வைத்துக் கொண்டு "இதை நிறைவேற்றவில்லை, அதை நிறைவேற்றவில்லை" என்று சொல்லிக்கொண்டு இருந்தார் என்று சொல்லக்கூடாது, புலம்பிக் கொண்டிருந்தார். அதையும் நாம் நிறைவேற்றியதும் என்ன சொல்லுவது என்று தெரியாமல் எதையுமே நிறைவேற்றவில்லை அப்படி என்று ஒரே வரியில் சொல்லி இருக்கிறார்.

பூனை கண்ணை மூடிக்கொண்டு உலகமே இருண்டுவிட்டதாக நினைக்குமாம். அதுபோல எதிர்க்கட்சித் தலைவர் நினைத்துக் கொண்டு இருக்கிறார். இவர் வேண்டுமென்றால் கண்ணை மூடிக்கொண்டு இருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் 19 மாதத்துக்கு முன்பே விழித்துவிட்டார்கள். இருண்ட காலத்தை முடித்து வைத்து, உதயசூரியனின் காலத்தை உருவாக்கிவிட்டார்கள். எனவே, மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் எரிச்சல் வார்த்தைகளுக்கெல்லாம் நான் விரிவாக பதில் சொல்ல விரும்பவில்லை. நாங்கள் சொன்ன வாக்குறுதிகள் உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கே நேரம் கிடைக்கவில்லை. இதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்லிக் கொண்டிருப்போம். ஏதோ அரசியலில் தாங்களும் இருக்கிறோம் என்று காட்டுவதற்காக நம்மை பற்றி விமர்சிக்கிறார்கள். ஆனால் எங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு நாங்கள் உண்மையாக இருக்கிறோம். உணர்வுப் பூர்வமாக உழைக்கிறோம். தமிழ்நாட்டை இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக ஆக்குவது ஒன்றுதான் என்னுடைய குறிக்கோள்.

தமிழகம் முன்னேற்றம்

அனைத்திலும் தமிழகம் முன்னேற்றம் அடைய வேண்டும். அதற்கான திட்டங்களை தீட்டி வருவது மட்டுமல்ல அந்தத் திட்டங்களால் தமிழகம் உயர்ந்து வருவதை கண்ணுக்கு முன்னால் நான் பார்க்கிறேன். நாள்தோறும் எங்களுக்கு கிடைக்கும் செய்திகள் இதனை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசாங்கத்தின் சார்பில் சில நேரங்களில் வெளியாகக்கூடிய புள்ளிவிவரங்களை பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சி கண்ணுக்குத் தெரியும். சில தன்னார்வ அமைப்புகள் வெளியிடும் அளவீடுகளில் தமிழ்நாட்டின் வளர்ச்சி தெரியும். எல்லாப் பிரிவினரையும் உயர்த்தி வருகிறது என்பதற்கான திட்டவட்டமான சான்றுகளாக அமைந்திருக்கிறது!

எனது இலக்கு

திட்டமிடுவது திட்டமிட்டதை செயல்படுத்திக் காட்டுவது! அதை நிறைவேற்றுவதுதான் என்னுடைய நாள்தோறும் பணியாக இருக்கிறது! திட்டத்தை அறிவித்தோம் நிதியை ஒதுக்கினோம் அத்தோடு கடமை முடிந்துவிட்டது என்று இல்லாமல், ஒவ்வொரு நாளும் நான் அதைக் கண்காணிக்கிறேன். உரிய காலத்தில் அனைத்துத் திட்டங்களையும் முடிப்பது தான் என்னுடைய இலக்கு என்று நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன். ஒவ்வொரு மாவட்டமாக சுற்றுப்பயணத்தை நடத்தி அரசு நிகழ்ச்சியில் பங்கேற்று பல பணிகளை முடித்துக் கொண்டு வருகிறேன். திறப்பு விழா நிகழ்ச்சி, அடிக்கல் நாட்டு விழா, இதையெல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திலும் முடித்துக் கொண்டு வருகிறேன்.

மாவட்ட வாரியாக ஆய்வு

அடுத்தகட்டமாக, மாவட்டவாரியாக, இந்தத் திட்டப்பணிகள் குறித்து குறிப்பிட்ட மாவட்டத்திற்கு நான் வந்து ஆய்வு நடத்தத் திட்டமிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அறிவிக்கப்பட்ட பணிகள் – நடைபெறுவதை நானே பார்த்து – அந்த பணிகளை முடுக்கிவிட இருக்கிறேன். அமைச்சர்களை உடன் வைத்துக்கொண்டு அதிகாரிகள் அலுவலர்களை நேரில் அழைத்துப் பேச இருக்கிறேன். நாங்கள் என்ன நோக்கத்திற்காக இந்தத் திட்டங்களைத் தீட்டித் தருகிறோமோ அதே நோக்கம் கடைநிலை அலுவலர்கள் வரை இருந்தால்தான் அந்தத் திட்டத்தின் நோக்கம் முழுமை அடையும். திருநெல்வேலியிலிருந்து இந்த மாவட்டம் பிரிந்திருந்தாலும், இந்த தென்காசிக்கு தேவையான அனைத்துத் திட்டங்களையும், நான் நிறைவேற்றித் தருவேன் அதில் யாருக்கும் எள்ளளவு சந்தேகம் இருக்க வேண்டிய அவசியமில்லை. தென்காசி மாவட்டத்தினுடைய முன்னேற்றத்திற்கு நிச்சயமாக இந்த அரசு துணை நிற்கும், நான் அதற்கு துணை நிற்பேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

திருவள்ளுவர் சிலையை திறந்தார்

முன்னதாக, முதலமைச்சர் தென்காசி, வேல்ஸ் வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு, அப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கூட்டுறவுத் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வருவாய் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.தனுஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். பழனிநாடார், ஈ.ராஜா, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், எம். அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம். சரவணன், தென்காசி மாவட்ட கலெக்டர் ஆகாஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

NEW VALUATION MAY BE HIGHER THAN RIVAL PAYTM

PhonePe seeks to raise $1 bn

SARITHA RAI
December 8

WALMART-OWNED DIGITAL PAYMENTS brand PhonePe is seeking to raise as much as $1 billion from General Atlantic and existing investors, including Tiger Global Management, Qatar Investment Authority and Microsoft, people familiar with the matter said, even as global funding dries up for startups.

The all-equity round is expected to close in the next two weeks and may take PhonePe's valuation close to $13 billion, including new capital invested, said the people, asking not to be named as the details of the deal are private. The valuation catapults PhonePe among India's most valuable brands in a digital payments market forecast by Boston Consulting Group to triple in size to $10 trillion by 2026.

The company is in talks with SoftBank Group's Vision Fund, an investor in PhonePe's parent entity Flipkart, though Walmart will remain top investor, the people said. Forced to go on the defensive due to its portfolio losses, SoftBank has cut its investments sharply this year.

PhonePe declined to respond to emailed queries about the fundraising.

The new valuation would give Bengaluru-headquartered PhonePe a higher valuation than arch-rival Paytm's parent One97 Communications, whose market capitalisation has dropped to $4 billion — down about 70% from its market debut last year. Competition is escalating between PhonePe, Paytm, Alphabet's Google Pay and Amazon.com's Amazon Pay, as well as a raft of startups looking to capitalise on the fast-digitising economy. SoftBank also backs Paytm.

PhonePe is closer to profitability in its core business, one of the people said. Revenue at the digital payments player grew about 140% to ₹16,500 crore, while losses narrowed by about 15% in the financial year ended in March, the company said.

A funding drought continues to plague the startup ecosystem, where companies are slashing headcount by the thousands and putting on hold plans to go public as valuations plummet.

To prepare for an initial public offering, which the people said is at least 18 to 24 months away, PhonePe has flipped its headquarters to India from tax-friendly Singapore. The company will be an entity directly under the Walmart umbrella, instead of under Flipkart, they said.

Launched in 2015 by former Flipkart executives Sameer Nigam, Rahul Chari and Burzin Engineer, PhonePe was soon acquired by Flipkart. PhonePe came under Walmart's ownership when the US retailing giant bought Flipkart in 2018 for $16 billion. The startup had 415 million registered users and 30 million registered merchants around the country as of last month.

—BLOOMBERG

VALUATION BOOST

- The all-equity round is expected to close in the next two weeks and may take PhonePe's valuation close to **$13 billion**
- It is seeking to raise the fresh funds from General Atlantic and existing investors, including Tiger Global, Qatar Investment Authority and Microsoft

Revenue at the digital payments player grew about 140% to ₹16,500 crore, while losses narrowed by about 15% in the financial year ended in March

India Inc expects pvt capex to gain further momentum

SHUBHRA TANDON
New Delhi, December 8

We should give credit to the government for their continuous investment on the public infrastructure that is what has helped us in the last few years.

SANJIV BAJAJ
CMD, BAJAJ FINSERV & PRESIDENT, CII

INDIA INC EXPECTS private capex to gain further momentum in the short to medium term, as it sees green shoots of revival in sectors like real estate, construction, logistics and chemicals, among others.

Speaking at the CII Global Economic Policy Summit 2022, top executives of corporate India commended the government on investments in public infrastructure. However, they highlighted that there are a number of sectors where there is an issue of excess capacity leading to tepid capital expenditure.

"We should give credit to the government for their continuous investment on the public infrastructure that is what has helped us in the last few years. In the private sector, we are beginning to see in the last few quarters. However, there are still many sectors where there is excess capacity. Obviously private capital does have to earn a particular return to justify that investment and capital. So, it is a more short to medium term window that we are looking at for private capital to come back," said Sanjiv Bajaj, chairman and managing director, Bajaj Finserv and president, CII.

Sanjiv Puri, chairman and managing director, ITC and vice president, CII said that while the macros for investment are pretty good in terms of visibility of funds, better corporate balance sheets and even the earnings are on a better trajectory but capacity utilisation is an issue. "While this is also picking up, there is a serious amount of global uncertainty, and there are serious headwinds on exports, which will dampen sentiment," he said.

However, he added that for companies like ITC, which are domestic focused, private capex continues. "We have already done, and some more is in the pipeline. So, for domestic oriented (investments), I think it is an ongoing process, and it is happening," he added.

Baba Kalyani, chairman and managing director, Bharat Forge, said that India must move fast to emerge from a factor driven economy to an innovation led economy, and stressed on innovation in manufacturing. "There are pockets of opportunities in select areas such as railways which India is leveraging to move ahead. We should change from traditionally being a country of traders to that of manufacturer like in China. This will require investment and capital," he said.

Uday Kotak, managing director and CEO, Kotak Mahindra Bank and chairman, CII Global Economic Policy Summit 2022 highlighted that to develop world class Indian companies, there is a need to build scale in manufacturing, based on cutting edge product innovation and developing IP rights rather than depending on arbitrage alone to secure an advantage.

During the discussion, he also mentioned that the interest rate trajectory in India would depend more on the signals provided by the US Fed.

Janmejaya Sinha, chairman, Boston Consulting Group India said that there were several issues that need to be addressed on water, power, health and education. "There is a huge potential for the care economy. We should seize the opportunity to emerge as the caretakers of the world," he said.

Adani's $900-m Kerala port work restarts as villagers end protest

JOSE DEVASIA
Kochi, December 8

CONSTRUCTION ON A $900 million port in Kerala resumed on Thursday after protesters from a mainly Christian fishing village ended a blockade of the Adani Group site.

The port has strategic importance for both India and Adani's owner Gautam Adani, as on completion it will be the country's first container transhipment hub, rivalling Dubai, Singapore and Sri Lanka.

At least 20 construction vehicles drove into the site in Vizhinjam, an Adani official told Reuters, after almost four months of deadlock over the project, which villagers blame for coastal erosion and affecting their livelihoods.

Adani, a conglomerate which is owned by Asia's richest man, says the port complies with all laws and has cited studies that show it is not linked to shoreline erosion, which the Kerala government says is due to natural causes.

"Work has resumed in full swing. We are working 24/7 to complete the project as early as possible," said the Adani official, who declined to be identified.

Video footage provided by the official showed vehicles trundling into the site without any sign of a shelter which the protesters had used to block its entrance.

Father Theodacious D'Cruz, one of the Catholic priests leading the protest, confirmed the entry had been cleared.

A day earlier, another priest said the protests would be suspended while an expert panel conducts an environmental impact study, but D'Cruz told Reuters he did not support that decision. He declined to elaborate.

The Kerala government has said it was committed to the project, which supporters say will create jobs. But in a manifesto, the villagers said they would not end their protest until plans have been made to resettle those who have lost their homes and land to the project and to coastal erosion.

Environmental activists have in the past held protests against another Adani project — the Carmichael coal mine in Queensland, Australia. —REUTERS

Forensic audit: Kirloskar Brothers' EGM results likely by Monday

GEETA NAIR
Pune, December 8

THE RESULTS OF the extraordinary general body meeting (EGM) of Kirloskar Brothers (KBL) held in Pune on Thursday are expected by Monday morning. Voting on the resolutions for carrying out a forensic audit of KBL ended on Thursday.

The EGM was called by Kirloskar Industries, a company managed and controlled by Atul and Rahul Kirloskar and was chaired by KBL's non-executive independent director, MS Unnikrishnan. None of the Kirloskar brothers or their family members spoke at the EGM.

Mahesh Chhabria, MD, Kirloskar (KIL) which has a 23.91% holding in Kirloskar Brothers, said knowing fully well that their resolution would be defeated by the brute majority, KIL wanted to highlight serious corporate governance issues and the lack of transparency in managing the affairs of KBL. Chhabria said he did not understand why there was so much resistance to conducting a forensic audit.

The proxy advisory firms had recommended that the resolution should be voted against but they were expecting that the KBL board acted in good faith, he said. He was not satisfied with the expense figures shared by KBL for professional, legal and consultancy expenses which did not add up. KBL had admitted to spending ₹70 crore towards legal expenses. KIL wanted the company to claw back legal expenses from our KBL CMD's personal wealth.

KIL said the independent directors of KBL had chosen to disregard their fiduciary responsibility and had acted against the letter and spirit of corporate governance. The KBL board too specifically recommended that the shareholders vote against this resolution instead of leaving it to the shareholders to decide, Chhabria said.

The KIL MD disagreed with KBL about the losses of ₹1 crore per day suffered because of the "so-called breach" of the Deed of Family Settlement and the acquisition of La Gajjar Machineries by Kirloskar Oil Engines. Sanjay Kirloskar, CMD of KBL and his family own 39.9% of KBL, institutional shareholders own around 10% and others including retail own 26% of KBL.

Cummins' tech for GAIL plant

GEETA NAIR
Pune, December 8

POWER SOLUTIONS COMPANY Cummins announced on Thursday that it would provide technology to build one of India's largest proton exchange membrane (PEM) electrolyser for GAIL at Vijaipur, in Madhya Pradesh in collaboration with EPC player Tecnimont, the Indian subsidiary of Maire Tecnimont Group. This project is expected to produce 4.3 tonne of green hydrogen per day. This was the largest green hydrogen plant in the country with a capacity of 10 MW.

Cummins said it would leverage its advanced proprietary PEM electrolysis technology, one of the most advanced and efficient technologies to manufacture electrolysers for the GAIL project. The plant is scheduled to be commissioned by November, 2023.

At the commencement of this flagship project, Ashwath Ram, MD of Cummins India, said the GAIL Green Hydrogen production project based on their PEM Electrolyzer technology was a first of its kind and would pave the way for many such projects in the future.

Ram said they were aligned with India's National Hydrogen Mission to pave the path towards zero emissions and support the transition to decarbonised power. The company believes that decarbonisation was a growth opportunity for Cummins.

Cummins has supplied and commissioned more than 600 electrolysers worldwide with PEM and alkaline technologies. These electrolysers operate in hydrogen refuelling stations, industrial applications, gas grids, and energy storage projects.

FROM THE FRONT PAGE

Lotus blooms in Gujarat, but wilts in Himachal

"The BJP has got the mandate of the people at a time when India has entered the Amrit Kaal. It has the support of the poor, Dalit, Adivasi, the exploited. People have voted for BJP because it has the strength and ability to take big decisions, strong decisions...Gujarat ne toh kamaal kar diya hai. I congratulate Naddaji, all BJP workers and the people of Gujarat. I had told people to break Narendra's record...all records have been broken. Gujarat's people have scripted history. This is unprecedented. People rose above caste, community, all kinds of division to vote for the BJP," he said.

Union defence minister Rajnath Singh and Gujarat Chief Minister Bhupendra Patel credited the Prime Minister for the party's "historic victory".

Gujarat BJP president CR Paatil said Bhupendra Patel would continue as Chief Minister and the swearing-in ceremony would be held on December 12.

Party sources said the message that the BJP will take from these elections is that it should keep the focus on strengthening the organisation booth-level upward.

"Prime Minister, (home minister) Amit Shah and Nadda have been repeatedly asserting that only a strong organisation can bring the party back to power and retain dominance," a BJP leader said.

Before the 2024 Lok Sabha polls, there are crucial elections in the states, including Karnataka, Madhya Pradesh, Rajasthan and Chhattisgarh. While the BJP has been focusing on the organisation in Madhya Pradesh, it will now turn to its other state units as well, sources said. "With micro-management at the booth level proving to be a success formula, the thrust of the party's electioneering will be on that," the leader said.

Modi's message after the results also echoed that. To the party workers in Gujarat, Modi, in a Twitter post, said, "I want to say – each of you is a champion! This historic win would never be possible without the exceptional hard work of our Karyakartas, who are the real strength of our Party."

"Thank you Gujarat. I am overcome with a lot of emotions seeing the phenomenal election results. People blessed the politics of development and at the same time expressed a desire that they want this momentum to continue at a greater pace. I bow to Gujarat's Jan Shakti," he said.

On Himachal Pradesh, he said: "I thank the people of Himachal Pradesh for the affection and support for the BJP. We will keep working to fulfil the aspirations of the state and raise people's issues in the times to come."

For the Congress, there are many takeaways. Although Himachal Pradesh is small, the party has won a Hindi-speaking state after four years – and breaking its cycle of defeats.

Rahul Gandhi's Bharat Jodo Yatra, on which the party is spending all its energies and focusing all its attention, has had little impact on the elections. Rather, the Himachal Pradesh verdict has proved that a localised campaign was the antidote to Modi's highly-personalised campaign.

The Congress campaign in Himachal was centred around promises to restore the Old Pension Scheme (OPS), creation of one lakh jobs to tap into the anxieties of the youth over lack of jobs and anger against the Agniveer scheme, and financial assistance of Rs 1,500 to every woman in the state.

AICC general secretary Priyanka Gandhi Vadra led from the front and the party rolled out a disciplined campaign around the manifesto themes. This, despite the fact that the party did not have a charismatic face in the state. In fact, the Congress has no leader with a pan-Himachal appeal.

And the near identical vote share that the BJP has managed signal that it still has tremendous appeal among people in the state and can bounce back in the general elections if the Congress remains complacent.

The Congress's Gujarat campaign may well become an example of how not to approach an election – in complete contrast to the party's Himachal campaign. The decimation of the party in Gujarat shows it cannot take even the Opposition space for granted. It went into the elections without a proper narrative and campaign theme.